# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 29.12.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

### ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3225/2018/அ3 நாள். 01.07.2022ன் படி , திருமதி.வி.மகாலட்சுமி என்பவருக்கு 05.07.2022 முதல் 04.07.2025 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 05.07.2022 முதல் 04.07.2023 வரையிலான முதலாம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.5,00,900/– முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமத்திற்கு குத்தகை உரிமதாரர் வைப்புத் தொகை ரூ.4,50,000/– செலுத்தியுள்ளார்.

இந்நிலையில் பேருந்து நிலையத்தில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ், மேற்படி கட்டண கழிப்பிடத்திற்கு அருகிலேயே புதிய நவீன கட்டண கழிப்பிடம் (SMART TOILET) கட்டப்பட்டு, 05.07.2023 ம் தேதி முதல் திரு.எப்.ஜெமேசா என்பவருக்கு ஆண்டு குத்தகை தொகை ரூ.4,52,000/–க்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டண கழிப்பிடத்தின் குத்தகை உரிமதாரர் திருமதி.வி.மகாலட்சுமி என்பவர், தான் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் கட்டண கழிப்பிடத்தின் மிக அருகிலேயே எந்தவிதமான முன் அறிவிப்புமின்றி, புதியதாக அதிநவீன கட்டண கழிப்பிடம் கட்டி குத்தகைக்கு விடப்பட்டு, 05.07.2023 முதல் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவதால், தனது கழிப்பிடத்திற்கு வரும் வசூல் மிகவும் குறைந்து தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு வருவதாகவும், தன்னால் குத்தகை தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும், எனவே தான் செலுத்த வேண்டிய குத்தகை தொகையில் இருந்து 40 சதவீதம் குறைத்து வழங்குமாறு தனது 18.08.2023 ம் தேதிய மனுவில் கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 20.09.2021 ம் தேதிய குறிப்பில், கழிப்பிடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், அருகருகே இரண்டு கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளதாலும், திருமதி.வி.மகாலட்சுமி என்பவருக்கு குத்தகை விடப்பட்டுள்ள கட்டண கழிப்பிடம் பழைய கட்டிடமாக உள்ளதாலும், பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி சுகாதார அலுவலர் அவர்கள், பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்து வந்த கட்டண கழிப்பிடத்திற்கு அருகில், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் புதியதாக நவீன கழிப்பிடம் கட்டப்பட்டு ஏலம் விடப்பட்டுள்ளது எனவும், புதிய நவீன கழிப்பிடம் பயன்பாட்டிற்கு வந்தபிறகு பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைய வாய்ப்புள்ளது எனவும், எனவே வருவாய் ஆய்வர் அறிக்கை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தனது 27.09.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி பொறியாளர் அவர்கள், பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே இருந்த பழைய கட்டண கழிப்பிடத்தின் அருகில் கட்டப்பட்டுள்ள புதிய தூய்மை பாரத திட்ட நவீன கட்டண கழிப்பிடம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, பழைய கழிப்பிடத்திற்கு செல்கின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைய வாய்ப்புகள் உள்ளது, வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தனது 14.11.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 16.11.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடத்தினை ஆய்வுசெய்யப்பட்டதில், அருகருகே இரண்டு கழிப்பிடங்கள் அமைந்துள்ளதாலும், ஏற்கெனவே இருந்த கட்டண கழிப்பிடம் பழைய கட்டிடமாக உள்ளதால், பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும் பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடத்திற்கு 2022-20223 ம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டு குத்தகை ரூ.5,00,900/- முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது எனவும், எனவே மன்றத்தின் அனுமதி பெற்று மீதமுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான குத்தகை தொகையில் 25 சதவீதம் குறைத்து வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட விபரங்களின்படியும், வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின் படியும், பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டண கழிப்பிடத்திற்கான இரண்டமாண்டு 2023-2024 (05.07.2023 முதல் 04.07.2024) குத்தகை தொகை மற்றும் மூன்றாமாண்டு 2024-2025 (05.07.2024 முதல் 04.07.2025) குத்தகை தொகை ஆகியவற்றில் 25 சதவீதம் குறைத்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3225/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**20 சதவீதமாக குறைத்து வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. (இருபது சதவீதம் மட்டும்) மன்றத்தீர்மான எண்.709**

2. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.710**

3. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.711**

4. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் நவம்பர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.712**

5. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் நவம்பர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.713**

6. இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர்களின் நவம்பர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.714**

7. நகராட்சிக்கு சொந்தமான IUDP – மோர் மார்கட் கடை எண். 01 ( வரி விதிப்பு எண். 057/509) கொண்ட கடைக்கு திரு.ஜி.வி.மாரிசுவாமி என்பவருக்கு 31.03.2025 வரை குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், மேற்படி

கடையினை 30.11.2023 முதல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தனது 24.11.2023 ம் தேதியில் மனு அளித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 28.11.2023 ம் தேதிய குறிப்பில், IUDP – மோர் மார்கட் கடை எண். 01 (வரி விதிப்பு எண். 057/509) கொண்ட கடையினை 30.11.2023 ம் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளலாம் எனவும், மேற்படி கடைக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார். வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தலைவர் அவர்களால் 28.11.2023 ம் தேதியில் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே IUDP – மோர் மார்கட் கடை எண். 01 கொண்ட கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கு மன்றம் பின்னேற்பு வழங்க வேண்டப்படுகிறது. (ந.க.எண். 4700/2015/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.**
**பின்னேற்வு வழங்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.715**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தற்போது புதிய தினசரி சந்தை வணிக வளாகம் கட்டப்பட்டு வருகிறது. நகராட்சி உதவிப்பொறியாளர் அவர்கள் தனது 14.12.2023ந் தேதிய குறிப்பில், மேற்படி தினசரி சந்தை வணிக வளாகத்தில் கடை எண். A1, மற்றும் கடை எண். A15 ஆகிய இரண்டு கடைகள் அருகில் உள்ள நுழைவு வாயிலை அடைத்து, 10 x 10 சதுரடி அளவில், A1/1, மற்றும் A15/1 என இரண்டு கடைகளாக மாற்றி ஏற்கெனவே உள்ள வழிகாட்டி மதிப்பின் படி பொது ஏலம் கோரலாம் எனத்தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 15.12.2023 ம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை வணிக வளாகத்தில் ஏற்கெனவே உள்ள கடைகளுக்கு மன்ற தீர்மானம் எண். 581 நாள். 14.08.2023 ன் படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதவாடகை ரூ.15,000/– மற்றும் ஏல முன்வைப்புத் தொகை ரூ.2,50,000/– ஆகியவற்றை தற்போது புதியதாக அமைக்கப்படவுள்ள இரண்டு கடைகளுக்கும் நிர்ணயம் செய்யலாம் எனவும், மன்றத்தின் அனுமதி பெற்று மேற்படி இரண்டு கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விபரங்களின்படி, புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாகத்தில் கூடுதலாக அமைக்கப்படவுள்ள கடை எண். A1/1, மற்றும் A15/1 ஆகிய இரண்டு கடைகளுக்கும் மாத வாடகை ரூ.15,000/– என நிர்ணயம் செய்யவும், ஏல முன் வைப்புத் தொகை ரூ.2,50,000/– என நிர்ணயம் செய்யவும், மேற்படி இரண்டு கடைகளுக்கும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.716**

9. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 23.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | LIG காலனி மற்றும் காளியண்ணன் நகர் அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் (2 எண்ணிக்கை) | 5,50,000 | **திரு.K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்** | 0,04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | நாய்க்கன் காடு அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 5,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.94 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | பெரியண்ணன் வீதி மற்றும் மொடச்சூர் அங்கான்வாடி மையம் பராமரிப்பு பணி செய்தல் (2 எண்ணிக்கை) | 6,80,000 | **M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் , ஒப்பந்ததாரர்** | 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | சீத்தம்மாள் காலணி மற்றும் வேங்கம்மையார் பள்ளியில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் (2 எண்ணிக்கை) | 3,50,000 | **திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.39 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5. | செங்கோடப்பா மனைப்பிரிவில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 4,30,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.03 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 2.33 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6. | சிலேட்டர் ஹவுஸ் வீதியில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு | 3,80,000 | **திரு.K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்** | 0.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி செய்தல் | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.31 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 7. | வெங்கடாச்சலம் பேட்டையில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 3,20,000 | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.06 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.49 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

(ந.க.எண். **2538 /2023/இ1**

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.K.R.ஆறுமுகம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்3-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. மேற்படி பணிகளில் வ.எண்4-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.V,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
6. மேற்படி பணிகளில் வ.எண் 5-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
7. மேற்படி பணிகளில் வ.எண் 6-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.K.R.ஆறுமுகம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
8. மேற்படி பணிகளில் வ.எண் 7-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.V,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
9. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. வரிசை எண்.1 முதல் 7 முடிய குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**2. அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.717**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–2024 இன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.3584/2023/அ3, நாள்.09.12.2023 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 கிருஷ்ணா நகரில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 400000 |

| | | |
|---|---|---|
| 2 | வார்டு எண்.2 ராமர் எக்க்ஸடன்சன் –6 இல் மழைநீர் வடிகால் கட்டுதல் | 300000 |
| 3 | வார்டு எண்.3 சின்னச்சாமி 3 வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 300000 |
| 4 | வார்டு எண்.4 பாட்டப்பன் வீதி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 300000 |
| 5 | வார்டு எண்.5 கோசலை நகரில் சிறுபாலம் அமைத்தல் | 200000 |
| 6 | வார்டு எண்.6 ராமர் எக்ஸ்டன்சன் 2 இல் மழைநீர் வடிகால் கட்டுதல் | 300000 |
| 7 | வார்டு எண்.7 திருவேங்கடம் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 300000 |
| 8 | வார்டு எண்.08 மங்கம்மா வீதி LIG காலனி சிறுபாலம் அமைத்தல் மற்றும் புதிய ஆஸ்பத்திரி வீதியில் சிறுபாலம் கட்டுதல் | 300000 |
| 9 | வார்டு எண்.9 மாருதி நகரில் சிறுபாலம் , காந்தி நகர் 1 வது வீதியில் சிறுபாலம் அமைத்தல் | 300000 |
| 10 | வார்டு எண்.10 மின் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 300000 |
| 11 | வார்டு எண்.11 திரு நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 300000 |
| 12 | வார்டு எண்.12 வெங்கட்ராமன் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 300000 |
| 13 | வார்டு எண்.13 அரசமரம் விநாயகர் கோயில் அருகில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் வழங்குதல் | 300000 |
| 14 | வார்டு எண்.14 கிருஷ்ணன் வீதி , கிட்டாசாமி வீதி சந்திப்பில் உள்ள பொது கிணறு தூர் வாரி தொட்டி அமைத்து கிட்டாசாமி வீதி , டூரி சுப்பிரமணியம் முதல் கிருஷ்ணா நகர் சந்து வரை குழாய் நீட்டிப்பு செய்தல் , | 300000 |
| 15 | வார்டு எண்.15 வாசு நகர் பகுதியில் பூங்கா பராமரித்தல் | 300000 |

ந.க.எண்.143/2023/இ1

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.718**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 10 அங்கன்வாடி மையங்களில் AC Sheet கூரையை மாற்றி PUF Sheet கூரையாக மாற்றும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.686 நாள்.29.11.2023 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் துவக்கப்பட்டுள்ளது. கீழ்காணும் அங்கன்வாடி மையத்தில்

1. LIG காலனி மற்றும் காளியண்ணன் வீதி
2. நாய்க்கன் காடு
3. பெரியண்ணன் வீதி மற்றும் மொடச்சூர்
4. சீதாலட்சுமிபுரம் மற்றும் வேங்கம்மையார் பள்ளி
5. செங்கோடப்பா மனைப்பிரிவு
6. சிலேட்டர் ஹவுஸ் வீதி
7. வெங்கடாச்சலம் பேட்டை

ஆகிய 10 அங்கன்வாடி மையத்தில் உள்ள AC sheet மற்றும் GI sheet மேற்கூரை அகற்றப்பட்டுள்ளது. AC Sheet- 635.86 Sqm,GI Sheet –27.83 Sqm , Rigch Sheet-57.66 Sqm , MS Door – 1.62 Sqm ஆகிய பொருட்களை பொது ஏலம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 2538 / 2023 / இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.719**

12. நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கீழ்க்கண்ட 24 கடைகளுக்கு 22.12.2023 ம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 38, 50, 52, 65, 21, 44
2. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைக்கு கிழபுறம் மேற்கு பார்த்த கடைகளுக்கு பின்புறம் கிழக்கு பார்த்த கடை எண். 13 மற்றும் 19
3. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
4. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
5. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 4 மற்றும் 5
6. ராமநாதன் வீதி கடை எண். 2
7. IUDP மோர் மார்கட் கடை எண். 01, 10 மற்றும் 11
8. வாரசந்தை கடை எண். 30
9. பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25
10. பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 26
11. IUDP– வாரசந்தை கடை எண். 16

மேற்கண்ட கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு கடைகளுக்கு மட்டும் தலா இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| 1 | பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25 | திரு.எஸ்.வேலவன்<br>த/பெ. சண்முகம்,<br>7/3, குப்பாண்டார் வீதி – 4<br>புதுப்பாளையம், கோபி<br>87784 00080 | ரூ.6,613/- | ரூ.6,750/- |
| | | திரு.பி.சண்முகசுந்தரம்<br>த/பெ. பெரியதம்பி,<br>7/4, குப்பாண்டார் வீதி – 3<br>கோபிசெட்டிபாளையம்<br>97882 81595 | ரூ.6,613/- | ரூ.6,700/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | IUDP–வாரசந்தை<br>கடை எண். 16 | திருமதி.ச.சாயினா அஜ்மத் பானு<br>க/பெ. சானு சையத் யூனுஸ்,<br>18A, I வண்டிப்பேட்டை,<br>வெங்கடாசலம் பேட்டை,<br>கோபி<br>73588 32703 | ரூ.4,700/– | ரூ.5,050/– |
| | | திருமதி.எஸ்.அனார்கலி<br>க/பெ. சலீம்,<br>12G. ஜின்னிங் பேக்டரி வீதி,<br>வண்டிப்பேட்டை, கோபி<br>95971 31136 | ரூ.4,700/– | ரூ.5,000/– |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண் 1 ல் கண்டுள்ள பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25 க்கு, திரு.பி.சண்முகசுந்தரம் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகையினை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.6,613/– ஐ விட கூடுதலாக ரூ.137/– சேர்த்து திரு.எஸ்.வேலவன் என்பவர் ரூ.6,750/– க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 2 ல் கண்டுள்ள IUDP–வாரசந்தை கடை எண். 16 க்கு திருமதி.எஸ்.அனார்கலி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகையினை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,700/– ஐ விட கூடுதலாக ரூ.350/– சேர்த்து, திருமதி.ச.சாயினா அஜ்மத் பானு என்பவர் ரூ.5,050/– க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 22.12.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25 மற்றும் IUDP–வாரசந்தை கடை எண். 16 ஆகிய இரண்டு கடைகளுக்கும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ள நபர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின்படி

1. பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண்.25 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6,750/– கோரியுள்ள திரு.எஸ்.வேலவன் என்பவருக்கும்,
2. IUDP–வாரசந்தை கடை எண். 16 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.5,050/– கோரியுள்ள திருமதி.ச.சாயினா அஜ்மத் பானு என்பவருக்கும்

ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.720**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/S. TRUSTUS OUTSOURCING SOLUTIONS PVT LTD, Plot No.117, 28th Street, Balagi Nagar, Chennai – 600 091 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 26.12.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/S. TRUSTUS OUTSOURCING SOLUTIONS PVT LTD, Plot No.117, 28th Street, Balagi Nagar, Chennai – 600 091 அவர்களின் 20.12.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 26.12.2023 ஆம்

தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.570/– என்னும் விலைவிகிதத்திலேயே தொடர்ந்து 27.12.2023 முதல் ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து ஒப்பந்தகாலத்தினை கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 27.12.2023 முதல் ஒரு மாத காலத்திற்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 6.35/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1829/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர்களின் முன் அனுமதி பெற்று 27.12.2023 ம் தேதி முதல் நோய் தடுப்பு பணிகளை மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது.**
**3 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.721**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் ராமர் எக்ஸ்டென்சன் மற்றும் கரட்டூரில் செயல்பட்டு வரும் நுண் உரமாக்கல் மையங்களில் மக்கும் குப்பையினை உரமாக்கும் பணிக்கும், RRC, BIO GAS PLANT சமுதாய மற்றும் பொதுக் கழிப்பறைகள் போன்றவற்றில் கிருமிநாசினி உபயோகப்படுத்தப்படும் Lemon Gross Oil விநியோகம் செய்யும் பணிக்கு 19.12.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு :

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் லிட்டர் ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | M/S. Maruthi General Industries, 45 Devapuram, Bhavani–638 301 | 2700/– + GST 18% |
| 2. | M/S. Sri Raghavendira Industries , 9/135–5 Panchu Godown Street Kamaraj Nagar, Elavamalai Post, Erode 638 316 | 2800/– + GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/S. Maruthi General Industries, 45, Devapuram, Bhavani– 638301 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். இப்பணிக்கு தேவைப்படும் 50 லிட்டர் Lemon Gross Oil கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2479/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.722**

15. இந்நகராட்சியின் மூலம் நகரில் தினமும் சேகரிக்கப்படும் கழிவுகளில் மறுசுழற்சிக்கு உதவாத பிளாஸ்டிக் கழிவுகள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. இப்பணிக்கு வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/S. Explosive Enterprises. Gobichettipalayam அவர்களிடம் லாரிகளை பெற்று ரூ. 1680 + 18% GST (டன் ஒன்றுக்கு) என்னும் ஒப்பந்த விலை விகிதத்தில் இப்பணிக்கு ஏற்கனவே ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று பிளாஸ்டிக் கழிவகள் அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் நாளது தேதி வரை இதற்கு ரூ.4,82,932 /- தொகை செலவிடப்பட்டுள்ளது.

பொதுசுகாதாரபணியின் அவசியம் கருதி எதிர் வரும் 31.12.2023 வரை கூடுதலாக இப்பணிக்கு ரூ.2.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்படுவதால் இப்பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகையுடன் கூடுதலாக ரூ.2.00 இலட்சத்திற்கு லாரிகளை விநியோகிக்கும் நிறுவனத்திடம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1152/2023/H1)
அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது.2. ஏற்றுக்கொள்ளப்பட்டது.3. அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.723**

16. இந்நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் –பராமரிப்பு பணிகள் (O&M Work) 2023-2024 இல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 24.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பராமரப்பு பணிகள் செய்தல் | 3,30,000 | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.17 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.38 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் | 2,70,000 | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.21 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பராமரிப்பு பணிகள் செய்தல் | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.30 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி தொடக்கப்பள்ளி நாய்க்கன் காடு பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் உயர்நிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 7,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் தொடக்கப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 10,00,000 | **M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர்** | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V,தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண்.2532/2023/இ1

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.V,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.V,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண்3-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. மேற்படி பணிகளில் வ.எண்4-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
6. மேற்படி பணிகளில் வ.எண் 5-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு வரிசை எண்.1 முதல் 5 முடிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
மன்றத்தீர்மான எண்.724

17. இந்நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் – மூலதன பணிகள் (Capital Work) 2023-2024 இல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 24.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் தளத்தில் கூடுதலாக 2 எண்ணிக்கை புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 28,00,000 | **M/s.லோகு கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.M.அப்புசாமி ஒப்பந்ததாரர் | 1.39 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் தளத்தில் 4 எண்ணிக்கையில் புதிதாக வகுப்பறைகள் கட்டுதல் | 50,00,000 | **M/s.ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர்** | 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.M.அப்புசாமி ஒப்பந்ததாரர் | 1.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் 2+2 எண்ணிக்கையில் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 48,00,000 | **திரு.M.அப்புசாமி ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் | 1.71 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் உயர்நிலைப்பள்ளியில் 3 எண்ணிக்கையில் முதல் தளத்தில் புதிதாக வகுப்பறைகள் கட்டுதல் | 28,00,000 | **M/s.லோகு கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர்** | 0.05 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.M.அப்புசாமி ஒப்பந்ததாரர் | 1.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண்.2532/2023/இ1

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.லோகு கன்ஸ்ட்ரக்ஷன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.ஸ்ரீ ஜெயம் கன்ஸ்ட்ரக்ஷன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

4. மேற்படி பணிகளில் வ.எண்3-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.M.அப்புசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
5. மேற்படி பணிகளில் வ.எண்4-க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.லோகு கன்ஸ்ட்ரக்ஷன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு வரிசை எண்.1 முதல் 4 முடிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.725**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–C, பிளாக் – 12, நகரளவை எண்.33/2 இல் பாகப்பிரிவினை மூலம் திரு.கே.இளங்கோவன், திரு.கே.சண்முகம் மற்றும் திருமதி.என்.கவிதா ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் உள்ள சாலையினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்வதாக மேற்காணும் மூன்று நபர்களால் 12.10.2023 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தினை ஆய்வு செய்யப்பட்டதில் பாகப்பிரிவினை மூலம் கோபிசெட்டிபாளையம் நகராட்சி மொடச்சூர் கிராமம் வார்டு–C, பிளாக் – 12, நகரளவை எண்.33/2 இல் பாத்தியப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டதில் 33/5 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 23 அடி அகலம் 133 அடி நீளம் கொண்ட உட்பிரிவு செய்யப்பட்ட சாலையானது அங்கீகரிக்கப்பட்ட அங்காளபரமேஸ்வரி நகர் மனைப்பிரிவின் சாலையின் தொடர்ச்சியாக அமைகிறது. எனவே, மேற்படி 23 அடி அகலம் 133 அடி நீளம் கொண்ட சாலையினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோரும் மனுதாரர்களின் விண்ணப்பத்தினை ஏற்று தானக்கிரையமாக பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.2439/2023/எப்1)

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.726**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி RRC மையத்தில் உள்ள 2 பேலிங் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பழுதான பாகங்களை புதியதாக மாற்றி, ஹைட்ராலிக் ஆயில் நிரப்பி சர்வீஸ் செய்யும் பணிக்கு 22.12.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ செந்தில் முருகன் ஓர்க்ஸ்ஷாப்<br>240 D, ஊத்துக்குளி ரோடு,<br>குன்னத்தூர் –638 103. | ரூ. 98530 /–<br>(GST 18% உட்பட) |
| 2. | ஸ்ரீ கஜலட்சுமி இண்டஸ்டீரிஸ்<br>88/162, கருங்கல் மேடு,<br>பெருமாநல்லூர் ரோடு,<br>குன்னத்தூர் –638 103. | ரூ.97055 /–<br>(GST 18% உட்பட) |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2 ல் குறிப்பிட்டுள்ள M/s. ஸ்ரீ கஜலட்சுமி இண்டஸ்டீரிஸ், 88/162, கருங்கல் மேடு, பெருமாநல்லூர் ரோடு – 638 103 அவர்களின் விலைவிகிதமான மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தினை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 2768/2023/எச்1)

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு வரிசை எண்.1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. 2 .ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.727**

20. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் – (1) அட்டவணைகள் I, II, III –ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், கோபிசெட்டிபாளையம் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணபத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 –இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I, II, III, மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 ந் தேதி முதல் அமுலுக்கு வரும்.

உரிமம் பெறாமலோ அல்லது புதுப்பிக்காமலோ தொழில் புரிவோரின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 114 A ன் படி நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

**அட்டவணை I**

**[ See rules 289(1), (2) and (5)]**

1. **பொருந்தக்கூடிய தன்மை :**
   1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. உரிமக்கட்டணம் :

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ. விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GST எண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ. விண்ணபத்தாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, படிவம் 17 ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

(a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3,500/- |

(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5,000/- |

(c) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |

| | | |
|---|---|---|
| நகராட்சி மன்றம் | 7500/- | 10,000/- |

(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/- | 35,000/- |

வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| வ. எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப் படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற் சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப் படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1600 | 3750 | 7750 | 10500 |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
